# நித்ரா 2023

# நடப்பு நிகழ்வுகள்

TNPSC குரூப் தேர்வு

உட்பட பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கு

பயன்படும் வகையில்

நித்ரா 2023–ஆம் ஆண்டிற்கான

நடப்பு நிகழ்வுகள் வினா–விடை வடிவில்

கொடுக்கப்பட்டுள்ளது.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | ஜனவரி | 01 |
| 02. | பிப்ரவரி | 09 |
| 03. | மார்ச் | 17 |
| 04. | ஏப்ரல் | 23 |
| 05. | மே | 28 |
| 06. | ஜூன் | 39 |
| 07. | ஜூலை | 50 |
| 08. | ஆகஸ்ட் | 62 |
| 09. | செப்டம்பர் | 73 |
| 10. | அக்டோபர் | 82 |
| 11. | நவம்பர் | 92 |
| 12. | டிசம்பர் | 97 |




# ஜனவரி 2023

1) ஆசியாவிலேயே முதல் முறையாக ஹைட்ரஜனில் இயங்கும் இரயில்களை அறிமுகப்படுத்திய நாடு எது?

சீனா

2) இந்தியாவின் மிகப்பெரிய ஹாக்கி மைதானமான ”பிர்சா முண்டா ஹாக்கி மைதானம்” எங்கு நிறுவப்பட்டுள்ளது?

ரூர்கேலா (ஒடிசா)

3) உலகின் முதல் பனை ஓலைச் சுவடி அருங்காட்சியகம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

திருவனந்தபுரம் (கேரளா)

4) எந்த நாட்டினால் அனுப்பப்பட்ட செயற்கைக்கோள் விண்வெளியில் இருந்து பூமியின் நன்னீர் வளங்களின் உலகளாவிய ஆய்வினை மேற்கொள்கிறது?

அமெரிக்கா

5) இந்தியாவில் முழுவதுமாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வங்கி சேவையினைக் கொண்டுள்ள முதல் மாநிலம் எது?

கேரளா

6) நிலச்சரிவு அழிவு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ள

”ஜோஷிமத்” நகரம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

உத்தரகாண்ட்

7) ‘தனு யாத்ரா’ எனப்படும் உலகின் மிகப்பெரிய திறந்தவெளி நாடக விழாவானது எங்கு நடைபெற்றது?

ஒடிசா

8) லோக் ஆயுக்தா மசோதாவினை நிறைவேற்றிய முதல் மாநிலம் எது?

மகாராஷ்டிரா

9) 108-வது இந்திய அறிவியல் மாநாடு எங்கு நடைபெற்றது?

நாக்பூர்

10) இந்தியாவில் முதல் முறையாக விலங்குகளுக்கான நடமாடும் செயற்கை முறை கருத்தரித்தல் மையத்தினை அமைத்துள்ள மாநிலம் எது?

குஜராத்

11) இந்தியத் தேர்தல் ஆணையமானது "மிஷன் 929 (Mission 929)" என்ற திட்டத்தினை எந்த மாநிலத்தில் தொடங்கியுள்ளது?

திரிபுரா

12) சமீபத்தில், இந்திய நூலக மாநாடு எங்கு நடைபெற்றது?

கேரளா (கண்ணூர்)

13) தமிழ்நாடு அரசானது, எந்த மாவட்டத்தில் உலகத்தரம் வாய்ந்த தாவரவியல் பூங்காவினை அமைக்க திட்டமிட்டுள்ளது?

செங்கல்பட்டு

14) இந்தியாவில் மாணவர்களால் நடத்தப்படும் மிகப்பெரிய திருவிழாவான சாரங்கின் 28வது பதிப்பு எங்கு நடைபெற்றது?

ஐ.ஐ.டி சென்னை

15) Global Tamil Angels இணையதளம் எங்கு தொடங்கப்பட்டுள்ளது?

தமிழ்நாடு

16) 2023 ஆம் ஆண்டு முதல் ஆசிய பசிபிக் தபால் ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள நாடு எது?

இந்தியா

17) 18வது தேசிய சாரணர் மற்றும் வழிகாட்டிக் கூட்டமானது எங்கு நடைபெற்றது?

ராஜஸ்தான்

18) சமீபத்தில், சியோம் பாலம் எங்கு திறக்கப்பட்டுள்ளது?

அருணாச்சலப் பிரதேசம்

19) உலகின் மிக நீளமான நதிக் கப்பலான 'எம்வி கங்கா விலாஸ்' பயணத்தை பிரதமர் நரேந்திர மோடி எங்கு தொடங்கி வைத்தார்?

வாரணாசி (உத்தரப்பிரதேசம்)

20) ஐக்கிய நாடுகள் சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான உலக வாழ்விட விருதினை வென்ற மாநிலம் எது?

ஒடிசா

21) அவதார் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையின் படி, இந்தியாவிலேயே பெண்கள் பணிபுரிய சிறந்த நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ள நகரம் எது?

சென்னை

22) 2023 ஆம் ஆண்டு சர்வதேச காத்தாடி விழா எங்கு தொடங்கப்பட்டது?

அகமதாபாத் (குஜராத்)

23) இந்தியாவிலேயே முதன்முறையாக MGNREGS திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்காக நல நிதி வாரியத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

கேரளா

24) உத்கர்ஷ் 2.0 திட்டத்தினைத் தொடங்கிய அமைப்பு எது?

இந்திய ரிசர்வ் வங்கி

25) "வீர் கார்டியன் 2023" பயிற்சியானது, இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெற்றது?

ஜப்பான்

26) மெட்டாவேர்ஸ் உலகில் நுழைந்த முதல் தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பு எது?

ஹாக்கி இந்தியா

27) "வருணா" கடற்படைப் பயிற்சியானது, இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே மேற்கொள்ளப்படுகிறது?

பிரான்ஸ்

28) இந்தியாவின் முதல் தளவாடங்கள், நீர்வழிகள் மற்றும் தகவல் தொடர்பு கல்வி நிறுவனமானது எங்கு தொடங்கப்பட்டுள்ளது?

அகர்தலா (திரிபுரா)

29) அரசியலமைப்பு சார்ந்த எழுத்தறிவு பெற்ற இந்தியாவின் முதல் மாவட்டமாக மாறியுள்ள மாவட்டம் எது?

கொல்லம் (கேரளா)

30) 2023-ல் வெளியிட்ட போபால் பிரகடனம் எதனுடன் தொடர்புடையது?

ஜி20

31) உலகப் பொருளாதார மன்றம் (WEF) தனது நான்காவது தொழில் புரட்சிக்கான மையத்தினை நிறுவுவதற்குத் தேர்ந்தெடுத்துள்ள நகரம் எது?

ஹைதராபாத்

32) முற்றிலும் மின் ஆளுமை முறைக்கு மாறிய முதல் இந்திய ஒன்றியப் பிரதேசம்

எது?

ஜம்மு & காஷ்மீர்